# நகரில் மரம் வெட்ட அனுமதிக்கக் கூடாது

## இயற்கை ஆர்வலர்கள் கோரிக்கை

**கோவை, ஜூலை 5:** கோவை நகரில் பொது இடங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் உள்ள மரங்கள் வெட்டப்படுவதற்கு அனுமதி அளிக்கக்கூடாது என கோரி இயற்கை ஆர்வலர்கள், பொது நல அமைப்பினர் மற்றும் அரசியல் கட்சியினர் கலெக்டரிடம் நேற்று மனு அளித்தனர்.

மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

கோவையில் பசுமை பரப்பை அதிகரிக்க மரங்களை நட்டு, வளர்க்கும் பணியில் பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன. ஆனால், பல்வேறு காரணங்களுக்காக நகரில் உள்ள பொது இடங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் நன்கு வளர்ந்த மரங்கள் அனுமதி இன்றி வெட்டப்படுகின்றன. மாநகராட்சி கிழக்கு மண்டலம் 20வது வார்டுக்கு உட்பட்ட பிருந்தாவன் பூங்காவில் மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. கலெக்டர் அலுவலக வளாகத்தில் கடந்த 23ம் தேதி நன்கு வளர்ந்த அரச மரம் வெட்டப்பட்டுள்ளது. சிறுவாணி பிரதான சாலையில் சாலை அகலப்படுத்தும் பணி என்ற பெயரில் ஏராளமான ராட்சத புளிய மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. இதுபோன்ற நிகழ்ச்சிகள், கோவையில் தொடர்கதையாகி வருகின்றன. இது தொடர்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதை தடுக்க கலெக்டர் தலைமையில் இயற்கை ஆர்வலர்கள், சுற்றுச்சூழல் அமைப்பினர் மற்றும் பொது மக்கள் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்க வேண்டும். மாநகரில் உள்ள பொது இடங்களில் மற்றும் அரசு அலுவலகங்களில் உள்ள மரங்களை வெட்ட, இக்குழுவின் அனுமதியை பெறும்படி செய்ய வேண்டும். அப்போது மரங்கள் வெட்டப்படுவது தடுக்கப்படும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

'ஓசை' அமைப்பு கணேஷ், 'மாற்றம்' அமைப்பு யோகநாதன், தமிழ்நாடு விவசாய சங்க நிர்வாகி கந்தசாமி, 'ராக்' ரவிச்சந்திரன், பெரியார் தி.க. பொதுச்செயலாளர் ராமகிருஷ்ணன், ம.தி.மு.க, முஸ்லிம் லீக், மாசு விழிப்புணர்வு இயக்கம் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் பலர் மனு அளிக்க வந்திருந்தனர்.